மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாவட்டங்கள்தோறும் இதுபோன்ற பறக்கும் படைகள் ஏற்பாடு செய்வதற்கில்லை. ஆனால் மாவட்டங்கள்தோறும் இருக்கும் அதிகாரிகளுக்கு ஜீப் கொடுத்து சோதனையிடச் செய்திருக்கிறோம். வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக கூறியிருக்கிறேன்.

Die-heads of Japanese make

* 419 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state;

(*a*) whether used die-heads Japanese make were sold by the Tamil Nadu Small Industries Corporation Limited, in 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஈரோடு, திருகு, மறை உற்பத்திப் பிரிவில் (Bolts and Nuts Unit) உள்ள, பழையதும், தேய்ந்து போனதும், பயன்படத் தகுதியற்றதென ஒதுக்கப்பட்டதுமான ஜப்பானிய வார்ப்பு அச்சு ஒன்றுதான் (Die-head) தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தினால், 1959 ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது.

(இ) திருகு மறை போடும் பொறிவுடன் (Bolt Threading Machine) மேற்குறிப்பிட்ட உபயோகமற்ற வார்ப்பு அச்சும் Die-head) பெறப்பட்டது. அப்பிரிவின் கண்காணிப்பாளர் உபயோகமற்ற இயந்திரம் அங்கு இருப்பதை 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கழகத்திற்கு அறிவித்தார். முறைப்படியாக ஒப்பந்தப் புள்ளி விவர நடைமுறைகளைக் கடைப்பிடித்த பிறகு, அப்பொறி, திண்டுக்கல்லில் உள்ள கணபதி மெக்கானிக்கல் புரோடக்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 2,001-க்கு விற்கப்பட்டது.

Ceramic factory at Vridhachalam

* 420 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*)Whether the production of sanitary–wares has been started at the Ceramic Factory Limited, Vridhachalam; and

(*b*) the steps taken to find market for them ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு சிறு தொழில் கூட்டு நிறுவனத்தின் ஒரு பிரிவாகிய விருத்தாசலம் மட்பாண்டத் தொழிற்சாலை 1960 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது.

(இ) தமிழ்நாடு சிறுதொழில் கூட்டு நிறுவனம், சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளி பகுதிகளில் துப்புரவுச் சாதனங்களுக்கான ஒன்பது மொத்த விற்பனையாளரை (Stockists) நியமித்துள்ளது. ஆந்திரப் பிரதேசத்துக்காக, ராஜமந்திரியில் மொத்த சில்லறை விற்பனையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களின் பிற மாவட்டங்களில் மொத்த விற்பனையாளரை நியமிப்பதற்காக இத்தொழில் நிறுவனத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மைசூர் மாநிலத்திலும், கோவாவிலும் இப்பொருட்களை விற்பதற்காகச் செல்வாக்கு மிக்க வணிகர் ஒருவர் பெங்களூரில்

நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொழில் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருட்களை வாங்குவதற்காக, மாநில வீட்டு வசதி வாரியத்துடனும் தென் பகுதி மாநிலங்களிலுள்ள பிற முக்கிய பொதுத்துறை நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இம்மாதிரி உற்பத்தி செய்யக்கூடிய துப்புரவு? சாதனங்கள் நல்லமுறையில் செய்யப்படுகிறதா? அவைகளை நம் தமிழ்நாட்டிலுள்ள சானிட்டரி சம்பந்தமான நிலையங்கள் வாங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம் விற்பனையை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் வெளிச் சந்தையில் இருக்கக்கூடிய போட்டி காரணமாக இப்போது விற்பனை குறைந்து வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: களிமண்ணால் செய்யக்கூடிய இந்த மட்பாண்டங்களை மாற்றி க்லே என்ற மண் இருக்கிறது, பீங்கான் செய்யக்கூடிய மண் இருக்கிறது. அதில் இவற்றைச் செய்வதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா? அதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு அளித்து அவற்றை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா? "மாயனூர் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா" என்பதில் ஓடடா என்பதை விட்டுவிட்டு நான் மேற்சொன்னபடி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மண்ணில் பல வகை உண்டு. மட்பாண்டத் தொழிலில் எந்தெந்த மண் வகைகளைப் பயன்படுத்தலாமோ அதைப் பயன்படுத்தி வெளிச்சந்தையில் நன்கு விற்பனை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Sub-Magistrate Courts

* 421 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to shift the Sub-Magistrate Court in Tenkasi in Tirunelveli district to the compound of the District Munsif's Court in Tenkasi?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

* 422 வினா.—திரு. பி. ஜயராஜ்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூ மாவட்டம், நன்பிமம் தாலுக்கா தலைநகரில் Sub-Magistrate Court ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. டி. மார்டின்: நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியிலிருந்து இது போன்றதொரு கோரிக்கையும் அதுபோல் திருநெல்வேலியிலிருந்து ஒரு கோரிக்கையும் அந்த பார் அஸோஸியேஷன்கள் ரேஸல்யூஷன் மூலம் இந்த சர்க்காருக்கு தெரிவித்ததுண்டா? ஆமெனில், அந்தவிதமாக பார் அசோசியேஷன் வழக்கறிஞர்கள் கொடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த